# 5. தமிழ் நாடு – வேளாண்மை

தமிழ்நாட்டின் முதன்மையானதும், மிகப் பழமையானதுமான தொழில் வேளாண்மைத் தொழிலாகும். வேளாண்மை என்பது மனிதனால் உணவுக்காகவும் மற்ற பயன்பாட்டிற்காகவும் பயிர்களை அதிக அளவில் வளர்க்கும் செயலாகும். வேளாண்மை என்பது பயிர் வளர்ப்போடு, பிராணி வளர்ப்பு, பறவை, மீன் மற்றும் காடு வளர்ப்பு போன்ற செயல்பாடுகள் உள்ளடக்கியதாகும்.

**செயல்பாடு**

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பு பெயர்களிலிருந்து பின்வரும் செயல்பாட்டிற்கு பொருத்தமானதை தெரிந்தெடுத்து எழுதுக:

கால் நடை வளர்த்தல்
பட்டுப்புழு வளர்த்தல்

பறவை வளர்த்தல்
பழமரங்கள் வளர்த்தல்

தேனீ வளர்த்தல்
பூக்கள் வளர்த்தல்

திராட்சை வளர்த்தல்

தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 56 சதவீத மக்கள் விவசாயத்தை தொழிலாகக் கொண்டுள்ளனர். வேளாண்மைத்துறை மனிதனுக்கு உணவும், கால்நடைகளுக்கு தீவனமும் அளிக்கிறது. பலவகைத் தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப்பொருள்களும் வேளாண்மை துறையிலிருந்து கிடைக்கிறது.

## பயிர் வளர்ப்பு முறைகள்

பயிர் வளர்ப்பு முறை அந்தந்த பகுதிக்கு ஏற்றவாறு மாறுபடுகிறது. அம்மாறுபாட்டின்படி பயிர் வளர்க்கும் முறையை கீழ்காணும் வகையில் வகைப்படுத்தலாம்.

## தீவிர தன்னிறைவு விவசாயம்

சிறிய அளவிலான விளைநிலத்தில் சுயதேவைக்கு மட்டுமே உணவு தானியங்களை வளர்க்கும் முறைக்கு, தீவிர தன்னிறைவு விவசாயம் என்று பெயர். தமிழ் நாட்டின் பெரும்பான்மையான விவசாயிகள் இம்முறையையே பின்பற்றுகின்றன. நீர்பாசன ஆதாரங்களின் தன்மை மற்றும் பயனீட்டளவு ஆகியவற்றை கொண்டு விவசாய முறையை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.




1) நன்செய் விவசாயம்

2) புன்செய் விவசாயம்

3) நீர்பாசன விவசாயம்

செரிக்கல்சர்(Sericulture), அப்பிகல்சர்(Apiculture), பால்வளம், தோட்ட விவசாயம் (Orchard), விட்டி கல்சர் (Viticulture), பேஃளோரிகல்சர் (Floriculture) பண்ணை வளர்ப்பு (Poultry).

**செயல்பாடு**

முந்தைய செயல்பாட்டிலிருந்து, அறிந்து கொண்ட சொற்றொடர்களைக் கொண்டு விவசாயத்தை மறு வரைமுறை செய்க.

## நீர் பாசன விவசாயம்

பாசன விவசாயம் என்பது மனிதனால், ஆண்டு முழுவதற்கும், வயலுக்கு தண்ணீரை கொணரும்படி செய்து பயிர்

சித்திரைப் பட்டம் என்று அழைக்கப்படும். இப்பருவத்திற்கு கரீப் என்ற மற்றொரு பெயரும் உண்டு. மே மாதத்தில் விதைக்கப்பட்டு, அக்டோபர் மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது. விதைப்பு காலமான மே மாதம் தமிழ் மாதமான சித்திரை மாதமாக இருப்பதால் இப்பருவம் சித்திரைப் பட்டம் என்றழைக்கப்படுகிறது.

**சம்பா பருவம் – ஆடிப்பட்டம்**

ஜூலை மாதத்தில் விதைத்து சனவரியில் அறுவடை செய்யப்படும் பருவம் சம்பா பருவமாகும். விதைப்பு காலமான ஜூலை மாதம், தமிழ் மாதமான ஆடி மாதத்தில் இருப்பதால் இப்பட்டத்தை ஆடிப்பட்டம் என்று அழைக்கின்றனர்.

**உனக்கு தெரியுமா ?**

ஆடிப்பட்டம் தேடி விதை என்பது முதுமொழி. ஏன் அவ்வாறு சொல்லப்பட்டது என்று அறிக.

**நவரைப் பருவம் – கார்த்திகைப் பட்டம்**

இப்பருவத்திற்கு ரபி (Rabi) (குளிர் காலம்) என்று மற்றொரு பெயரும் உண்டு. நவம்பர் மாதத்தில் விதைத்து மார்ச்சு மாதத்தில் அறுவடை செய்யும் பருவமே நவரை பருவமாகும். விதைக்கும் காலம் தமிழ் மாதமான கார்த்திகை மாதம் என்பதால் இப்பட்டம் கார்த்திகைப் பட்டம் என்று அழைக்கப்படுகிறது.

**செயல்பாடு**

உனது பகுதியில் எந்தெந்த பருவத்தில் எந்தெந்த பயிர் சாகுபடி செய்யப்படுகிறது என்பதை அறிந்து எழுதுக.

**விவசாயத்தை நிர்ணயிக்கும் காரணிகள்**

ஓர் இடத்தின் விவசாயத்தை, நிர்ணயிக்கும் காரணிகளை இயற்கை, சமூக மற்றும் பொருளாதார காரணிகள் எனப் பிரிக்கலாம் அவை பின் வருமாறு –

மண் வகை, தட்ப வெப்பம், மழை அளவு, ஈரப்பதம், நிலத்தின் சரிவு (அ) சமன் அளவு போன்றவை இயற்கை காரணிகளாகும்.

விவசாயம் சார்ந்த பாரம்பரிய அறிவு, நம்பிக்கை, நிலத்தின் அளவு மற்றும் உரிமை, விவசாயியின் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை போன்றவை சமூகக் காரணிகளாகும்.

விவசாயக் கடனுதவி, அரசு மானியம் மற்றும் ஊக்கத் தொகை ஆகியவை பொருளாதாரக் காரணிகளாகும்.

**செயல்பாடு**

கீழே கொடுக்கப்பட்டுள்ள மண்வகைகளுக்கு பொருத்தமான பயிரை தெரிவு செய்து எழுதுக.

| மண் | பயிர் |
|---|---|
| 1. செம்மண் | |
| 2. வண்டல் | |
| 3. துருக்கல் | |
| 4. கரிசல் | |

(பயிர்: நெல், கரும்பு, இரப்பர், பருத்தி)

**செயல்பாடு**

நீ கண்டறிந்த பயிர்களை அட்டவணைப்படுத்தி, அதனை அப்பகுதி கால நிலையோடு தொடர்பு படுத்தி அறிக.

**தமிழ் நாட்டின் பாசன ஆதாரங்கள்**

கால்வாய்கள், குளங்கள் மற்றும் கிணறுகள் தமிழ் நாட்டில் முக்கிய பாசன ஆதாரங்களாகும்.

**கால்வாய்கள்**

வற்றாத ஆறுகளிலிருந்தும், அணைக்கட்டுகளிலிருந்தும் நீரினை வயலுக்கு கொண்டு செல்ல மனிதனால் ஏற்படுத்தப்பட்ட நீர்வழித்தடங்களை கால்வாய் என்கிறோம். காவிரி மற்றும் தாமிரவருணி படுகைகளில் கால்வாய் பாசனம் சிறந்த அளவில் நடைபெறுகிறது. தமிழ் நாட்டில் 27 சதவீத நிலங்களில் பயிர்சாகுபடி கால்வாய் பாசன முறைமூலம் நடைபெறுகிறது.

**செயல்பாடு**

தமிழ் நாட்டில் மூன்று பருவங்களில் நெல் பயிரிடப்படுகிறது. வட இந்தியாவில் அவ்வாறு பயிர் செய்ய இயலாத காரணத்தை கண்டுபிடி.

**உனக்குத் தெரியுமா ?**

தமிழ் நாட்டில் நெல் ஆராய்ச்சி நிறுவனம் ஆடுதுறையில் அமைந்துள்ளது. தமிழ் நாடு விவசாய பல்கலைக்கழகத்தின் திருவாரூர் கிளை TNRH 174 என்ற புதிய நெல் இரகத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நெல்வகை ஏக்கருக்கு 4500 கிலோ நெல் உற்பத்தி செய்யவல்லது என்பது இதன் சிறப்பு அம்சமாகும்.

குறுதானியங்களான (Millets) கம்பு, கேழ்வரகு, வரகு, தினை, சாமை மற்றும் சோளம் தமிழ்நாட்டின் வறண்ட பகுதியில் சாகுபடி செய்யப்படுகின்றன.

## மற்றைய பயிர்கள்

### இழை பயிர்கள்

சணல் மற்றும் பருத்தியை இழை பயிர் என்கிறோம். தமிழ்நாட்டின் மிக முக்கிய இழை பயிர் பருத்தியாகும். பருத்திக்கு உகந்த மண் கரிசல் மண்ணாகும். கோயம்பத்தூர், திருநெல்வேலி, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பருத்தி அதிக அளவில் பயிரிடப்படுகிறது. எம்.சி.யூ 4, எம்.சி.யூ 5, ஆர்.எ. 5166 போன்ற பருத்தி இரகங்கள் தமிழ் நாட்டில் பயிரிடப்படுகிறது.

| குறு தானியங்கள் | உற்பத்தியில் முதன்மை மாவட்டங்கள் |
|---|---|
| சோளம் | கோயம்புத்தூர், திருச்சி, திண்டுக்கல் |
| கம்பு | விழுப்புரம், தூத்துக்குடி |
| கேழ்வரகு | கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் |
| மக்காச் சோளம் | பெரம்பலூர், திண்டுக்கல் |
| கோரா (தினை) | சேலம், நாமக்கல் |

தமிழ் நாட்டில் சிறுகடலை, துவரை, பச்சை பயறு, உளுந்து மற்றும் கொள்ளு போன்ற பயறு வகைகள் சாகுபடி செய்யப்படுகிறது.

**செயல்பாடு**

நெல் அறுவடைக்குப் பின் பயறு வகை பயிரிடப்படுவது வழக்கம். ஏன் என்ற காரணத்தை ஆராய்க.

சிறுகடலை கோயம்புத்தூர் மாவட்டத்தில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. வேலூர், கிருஷ்ணகிரி மாவட்டங்கள் துவரை உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றன. திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி பச்சை பயிர் உற்பத்தியில் முன்னிலையில் இருக்கின்றன. நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்டங்கள் உளுந்து உற்பத்தியில் முன் நிற்கின்றன. கொள்ளு உற்பத்தியில் கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்கள் முதலிடம் வகிக்கின்றன.

### பணப்பயிர்

சுய தேவைக்கு அல்லாது, சந்தை நோக்குடன் வளர்க்கப்படும் பயிர்களை பணப்பயிர்கள் என்கின்றனர். தமிழ் நாட்டில் கரும்பு, புகையிலை, எண்ணெய் வித்துகள், மசாலா பொருட்களான மிளகாய், மஞ்சள், கொத்துமல்லி ஆகியவை பணப்பயிர்களாக சாகுபடி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டின் முதன்மை பணப்பயிரான கரும்பு மிகப்பெரிய பரப்பளவில் பயிரிடப்படுகிறது. ஒன்பது மாத பயிரான கரும்பு சாகுபடிக்கு, அதிக வளமுள்ள மண், அதிக வெப்பம், பூக்கும் காலம் வரை அதிக நீர் பாசனம் ஆகியவை தேவைப்படுகிறது. கோயம்பத்தூர், கரூர், விழுப்புரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கரும்பு மிகையாக சாகுபடி செய்யப்படுகிறது.

தமிழ் நாட்டின் இரண்டாவது முக்கிய பணப்பயிர் புகையிலையாகும். புகையிலை, திண்டுக்கல், தேனி மற்றும் மதுரை

முன்னேற்றம் கண்டது. ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம், சொத்துரிமை, சிறு விளை நிலங்களை ஒன்று படுத்துதல், குத்தகை முறை கூட்டுறவு விவசாயம் போன்ற புரட்சிகரமான மாற்றங்கள் சுதந்திர இந்தியாவில் ஏற்பட்டன.

தற்போதைய உலகமயமாக்கல் என்ற கோட்பாடும் தமிழ் நாட்டின் வேளாண்மைத் துறையில் குறிப்பிட்ட மாற்றத்தை கொண்டு வந்துள்ளது.

### வேளாண்மை தொழிலில் மாறி வரும் போக்கு

தமிழ் நாட்டில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த முறைகள் மெதுவாக பாரம்பரிய விவசாய முறைகளை இடம் பெயர செய்துள்ளது. இந்நிகழ்வு "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்று இல்லாமல் பழைய பாரம்பரியத்தின் இடர்பாடுகளை களைந்து, புதிய முறைகளின் நன்மைகள் விவசாயிகளை சென்றடைய பயிற்சி மையங்கள் தமிழ் நாட்டில் பல்வேறு நிலைகளில் செயல்படுகின்றன. கோயம்பத்தூரில் உள்ள வேளாண் பல்கலைக்கழகமும், தரமணியில் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையமும் இவ்வகை முயற்சியில் நிலைத்த முன்னேற்றம் அடைய வழிவகுக்கின்றன. சிலபுதிய வழிமுறைகளின் பெயர்பட்டியல் பின் வருமாறு –

1) நுண்ணிய நீர் பாசனம்(Micro Irrigation)

2) ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு (Integrated pests control management)

3) அசோலா போன்ற நுண்ணுயிர் வளர்ப்பு

4) புவியியல் தகவல் அமைப்பு (GIS) மற்றும் உலகளாவிய இடம் சுட்டும் அமைப்பை (GPS) கொண்டு செயல்படும் துல்லிய வேளாண்மை முறையாகும்.

**தெரியுமா உனக்கு ?**

மணிச்சத்து / தழைச்சத்து சேர்ப்பதால் மண்ணின் நீர் கொள்ளும் தன்மை அதிகரிக்கும். இதனால் நுண்ணுயிர் செயல்பாடு அதிகரிக்கும். வேருக்குத் தேவையான ஊட்டச்சத்து இம்முறையால் பெருகும். பயிர் நன்கு வளர வாய்ப்பு அதிகரிக்கும்.

### விவசாய முன்னேற்றத்திற்கான அரசின் செயல் முயற்சிகள்

1. தரச் சான்றிதழ் பெற்ற விதைகள், அரசால் விநியோகிக்கப்படுகிறது

2. தேவையான மணிச்சத்து, நுண்ணுயிர் சத்து மானியமாக அளிக்கப்படுகிறது.

3. தினமும் 6 முதல் 8 மணி நேர இலவச மின்சக்தி கொடுக்கப்படுகிறது.

4. அரசே தானியங்களுக்கு விலை நிர்ணயம் செய்கிறது. அதனால் விவசாயிகள் நிதி நெருக்கடியிலிருந்து காப்பாற்றப்படுகிறார்கள்.

5. உழவர் சந்தையில் இடைத்தரகர்களின் குறுக்கீடற்று விவசாயிகள் விற்பதன் மூலம் இலாபமும், பொது மக்களுக்கு குறைந்த விலையில் நிறைந்த பொருளும் கிடைக்க வழி செய்கிறது.

6. இயற்கை இடர்கள் நேரும் போது அரசே விவசாய கடனைத் தள்ளுபடி செய்கிறது.

7. பயிர் காப்பீட்டுத் திட்டம் நடைமுறையில் உள்ளது.

8. நீலகிரியிலும், கிருஷ்ணகிரியிலும், விவசாய ஏற்றுமதி மண்டலத்தை அரசு அமைத்துள்ளது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தினைப் பார்த்து ஆராய்ந்து பின்வரும் கேள்விகளுக்கான விடைதருக.

விளைநிலத்தின் பரப்பளவையும், மக்கள் தொகை வளர்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்த்து உன் சக மாணவமணிகளுடன் கலந்தாய்வு நடத்து.

1. விளைநிலத்தை ஏன் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் ?

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | பறவை வளர்த்தல் | அப்பிகல்சர் |
| 2. | பட்டுப்புழு வளர்த்தல் | பண்ணை வளர்ப்பு |
| 3. | தேனீ வளர்த்தல் | ஏற்றுமதி செய்யும் துறைமுகம் |
| 4. | பழங்கள் வளர்த்தல் | செரிகல்சர் |
| 5. | தூத்துக்குடி | கால்நடை பராமரிப்பு |
| | | விட்டி கல்சர் |
| | | தோட்ட விவசாயம் |

## இ. குறு விடை தருக.

1. தீவிர தன்னிறைவு விவசாயம் என்றால் என்ன ?
2. சிறு குறிப்பு வரைக.
   அ) கலப்பு விவசாயம்
   ஆ) தோட்டப் பயிர் விவசாயம்
   இ) சந்தை தோட்டப் பயிர் விவசாயம்
3. விவசாயத்தை கட்டுப்படுத்தும் காரணிகள் யாவை ?
4. கல்லணையின் முக்கியத்துவத்தை விவரி.
5. நன்செய் புன்செய் விவசாயத்தை வேறுபடுத்திக் காட்டுக.
6. ஆழ்கடல் மீன்பிடித்தல், உள்நாட்டு மீன்பிடித்தல் இரண்டையும் வேறுபடுத்தி காட்டுக.

## ஈ) ஒரு பத்தியில் விடையளி.

1. தமிழ்நாட்டின் சாகுபடி பருவங்களை விவரி.
2. உள்நாட்டு மீன் வளர்ப்பு பற்றி எழுதுக.
3. வேளாண்துறை மாறி வரும் போக்கினை படம் பிடித்து காட்டுக.
4. வேளாண்மை உற்பத்தி பெருக அரசு மேற்கொண்ட முயற்சிகளை பட்டியலிடு.

## உ. கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டு வரைபடத்தில் கீழ் காணும் இடங்களை குறி.

1. தென்னிந்தியாவின் நெற் களஞ்சியம்
2. பருத்தி விளையும் பகுதி
3. தேயிலை விளையும் பகுதி
4. முந்திரி விளையும் பகுதி
5. கரும்பு விளையும் பகுதி

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | ஏற்றுமதி | காஞ்சிபுரம் |
| 2. | இறக்குமதி | தூத்துக்குடி |
| 3. | டைடல் பார்க் | வியாபார சங்கம் |
| 4. | டான்சில்க் | மதுரை |
| 5. | முதல் உழவர் சந்தை | சென்னை |
| | | இயந்திரப் பொருட்கள் |
| | | மென்பொருட்கள் |

## இ. சுருக்கமான விடையளி.

1. வர்த்தகம் என்றால் என்ன ?
2. தமிழ் நாட்டின் இறக்குமதி பொருட்கள் சிலவற்றை குறிப்பிடு.
3. இறக்குமதி, ஏற்றுமதியை வேற்றுமைபடுத்து.
4. உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகம் என்பது என்ன ?

## ஈ. விரிவான விடையளி.

1. வர்த்தகம் ஏன் வியாபாரத்தின் இயக்க இயந்திரம் என கூறப்படுகிறது ?
2. உழவர் சந்தையைப் பற்றி எழுதுக.

## உ. செய்து பார்க்க.

1. பல்வேறு நாடுகளின் செலவாணி முறையை அறிந்து, அதற்கு சமமான இந்திய ரூபாயை கண்டுபிடி
2. அருகிலுள்ள பல்பொருள் அங்காடிக்கு சென்று அங்கு விற்கும் பொருட்கள் எங்கிருந்து வரவழைக்கப்பட்டன என்பதையும் அதன் விலையையும் அறிக.

